# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## 2014 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டம்

[2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 50/2011

## 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப்பெயரைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்திற்கான விரிவுப்பெயர் "அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கும் எழுத்திலான சட்டத்திற்குமான திருத்தம்.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தைக் குறித்துக்காட்டுகின்ற "இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்" மற்றும் "அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்" என்பதனை குறித்துக்காட்டுகின்ற "இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்" அல்லது "அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் "இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம்" என்பதனைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதலும் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(அஅ) பந்தி (அ) என்பது தொடர்பில் நடாத்தப்படும் கற்கைகளுக்கு இயைபான பிரயோகங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறு பகிரங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்;";

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(உ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் பட்டப்பின் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் ஆராய்ச்சிக்கான பயிற்சியும், வழிகாட்டலும் மற்றும் உதவியும் வழங்குதல்;";

(3) பந்தி (உ) என்பதனை அப்பிரிவின் பந்தி (ஊ) என மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 6 ஆம் பிரிவானது இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

"ஆளுநர் சபை.

6. (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பன பின்வருவோரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளுநர் சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது :-

(i) அறிவியல் பற்றிய அலுவல்கள்மீது சனாதிபதிக்கான மதியுரைஞர் ;

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ; அத்துடன்

(iii) நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(ஆ) பின்வரும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் :-

(i) நிறுவகத்தின் வேலை தொடர்பில் பட்டப்பின் பட்டத் தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களிடையே யிருந்து, மூன்று வருடங்கள் கொண்ட காலப்பகுதிக்கெனச் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட வர்களான நான்கு ஆட்கள், இவர் களுள் ஒருவர் சபையின் தவிசாளராக சனாதிபதியினால் நியமிக்கப் படுதல் வேண்டும் ;

(ii) நிறுவகத்தின் வேலை தொடர்பில் சிறப்புத் தகைமையுடையுள்ளவர் களான ஆட்களிடையேயிருந்து மூன்று வருடங்கள் கொண்ட காலப் பகுதிக்கென அமைச்சரினால் நிய மிக்கப்பட்டவர்களான இரண்டு ஆட்கள் ; அத்துடன்

(இ) ஆராய்ச்சிப் பேரவையினால் அதன் உறுப் பினர்களிடையேயிருந்து மூன்று வருடங் கள் கொண்ட காலப்பகுதிக்கென அல்லது அவர் வித்துவப் பேரவையின் உறுப்பின ரொருவராகவிருப்பதின்றும் இல்லாதொ ழிகின்ற வரையில் இதில் எது முதலில் வரு கிறதோ அதுவரை பதவி வகிக்கவென தேர்ந் தெடுக்கப்பட்ட இரண்டு ஆட்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் ''பேரவை உறுப் பினர்கள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவர்).

(2) அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியின் பின்னர் பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அல்லது பேரவை உறுப்பினரொருவர் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக அவர் அகற்றப்பட்டாலன்றி, மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) (i) சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது அது சனாதிபதியால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அத்தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

(ii) அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது அது அமைச்சரினால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அத்தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

(4) (i) சனாதிபதியானவர் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக அவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(ii) அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அல்லது பேரவை உறுப்பினரொருவர் அமைச்சரினால் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(5) (i) சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதினால் அல்லது அகற்றப்படுவதினால் பதவியை வறிதாக்குவதன் விளைவாக ஏற்படும் வெற்றிடமொன்று உட்பிரிவு (i)இன் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு சனாதிபதியால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதினால் அல்லது அகற்றப்படுவதினால் பதவியை வறிதாக்குவதன் விளைவாக ஏற்படும் வெற்றிடமொன்று உட்பிரிவு (i) இன் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அமைச்சரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(iii) வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவர் எவரை அடுத்துறுகின்றாரோ அவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) (i) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவர் அத்தகைய இயலாமைபற்றி எழுத்தில் சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

(ii) *அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவர் அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னோர் ஆளை நியமிக்கலாம்.*

(iii) *பேரவை உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவர் அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் வித்துவப் பேரவையின் விதப்புரையின் மீது, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னோர் ஆளை நியமிக்கலாம்.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்துவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"*(1) சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். தவிசாளரானவர் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளிக்காமல் இருக்கின்றவிடத்து, சமுகமளித்திருக்கின்ற உறுப்பினர்கள் அவர்களிடையேயிருந்து அக்கூட்டத்திற்கெனத் தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.*".

*7*. முதன்மைச் சட்டவாக்கத்தின் *11* ஆம் பிரிவு, அப்பிரிவிற்கான (ஆ) என்னும் பந்தியை நீக்கம் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) அமைச்சரினால் சபைக்கு நியமனம் செய்யப்படுவதற்கென இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அத்தகைய எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குமாறு அமைச்சருக்கு விதப்புரை செய்தல்;".

*8*. முதன்மைச் சட்டவாக்கத்தின் *44* ஆம் பிரிவு, முறையே "எதிர்க்கட்சித் தலைவர்" மற்றும் "முதலமைச்சர்" என்ற சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை நீக்கம் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*9*. ஐமிச்சங்களைத் தவிர்ப்பதற்கென இச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம் எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் *2* ஆம் பிரிவால் தாபிக்கப்பட்ட இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தைப் பின்னுறுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க - பேணல்கள்.

(அ) இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தால் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ;

(ஆ) இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட எல்லாக் குற்றவழக்குகளும், வழக்குகளும் மேன்முறையீடுகளும் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளும் ;

(இ) இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக வழங்கப்பட்ட எல்லாத் தீர்ப்புக்களும் கட்டளைகளும் ;

(ஈ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்றுள்ளவாறான இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தின் வேறு எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும் மற்றும் கடப்பாடுகளும் ; அத்துடன்

(உ) இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்திற்குச் சொந்தமானவையும் இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அதன் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டவையுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும்,

இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தால் தொடர்ந்து வைத்திருக்கப்படுதலும், வலுவுக்கிடப்படுதலும் மற்றும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்